# தொடர் ஜெபமாலை ஜெபம் ¼2019&2020½

வங்காள விரிகுடா கடலோரத்திலே, விசாகப்பட்டிண நகரிலே, ரோஸ் மலையில் ஒரு நூற்றாண்டாக ஆன்மீகத்தின் தொட்டிலாகவும், மையமாகவும், விசாகப்பட்டிண மரிய அன்னை திருத்தலத்தில் வீற்றிருப்பவர் "தூய கன்னிமரியாவின் மாசற்ற இருதயம்". அன்னையின் திருத்தலத்தில் ஆவியானவரின் உந்துதலால் ரோஸ் மலை ஜெபமாலை குழு வழியாக ஜெபப் பிரச்சாரமானது "தொடர் ஜெபமாலை ஜெபம்" என்ற பெயரில் 1995ம் ஆண்டிலிருந்து 25 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிக் கொண்டு இருக்கின்றது. "தொடர் ஜெபமாலை ஜெபத்தின் வெள்ளிவிழா" ஆண்டிலே இந்த ஜெபப் புரட்சியின் வழியாக ஆன்மீக வளர்ச்சியும் அருளும் பொழியும் கடவுளுக்கு மிகுந்த நன்றியினை நாங்கள் அர்ப்பணித்துக்கொள்கின்றோம். மரிய அன்னையின் இப்புனிதமிக்க பகுதியானது இறைமக்களுக்கு ஜெபமாலை அன்னையின் மறைபொருளை ஆழ்ந்து சிந்திக்ககூடிய ஆன்மீக சூழ்நிலையையும் தெய்வீக அனுபவத்தையும் பெற்றுத் தந்து கொண்டிருக்கின்றது. ஆகவே இப்பேர்ப்பட்ட பணியைச் செய்ய தொடர்ந்து ஊக்கமும் உற்சாகமும் ஆசீர்வாதமும் வழங்கிய அப்போதய மறைந்த விசாகப்பட்டிண உயர்மறைமாவட்டப் பேராயர் மேதகு Dr. K. மரியதாஸ், MSFS அவர்களுக்கும் தொடர்ந்து எங்களுக்கு உறுதுணையாக இருக்கும் தற்போதய பேராயர் மேதகு Dr. M. பிரகாஷ் அவர்களுக்கும் நாங்கள் நன்றிக்கடன்பட்டுள்ளோம். இந்த ஜெபப் பிரச்சாரத்தை தங்களுடைய சுயநலமற்ற விடாமுயற்சியினால் எடுத்துச் செய்த முன்னாள் உறுப்பினர்களுக்கு எங்கள் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். இந்த ஜெபப் பிரச்சாரத்தை பல்வேறு குருக்கள், துறவியர், இறைமக்கள் ஆதரித்து பங்குபெற்று பயனடைந்து வருகின்றார்கள். அவர்களுக்கும் எங்கள் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

## ஏன் நாம் ஜெபமாலை ஜெபிக்க வேண்டும்?

செல்வங்களுக்கும், நுகர்வுக்கும், ஒற்றுமையின்மைக்கும், கொடிய நோயிக்கும், தூய்மையற்ற எண்ணங்களுக்கும், பாதுகாப்பின்மைக்கும், தீவிரவாதத்திற்கும், சுற்றுப்புற சீர்கேட்டுக்கும், பிளவடைந்த குடும்பங்களுக்கும், கவனக்குறைவான பிள்ளைகளுக்கும், பொறுப்பற்ற குடிமக்களுக்கும் மத்தியிலும், மனிதம், அறம், நெறி, ஒழுக்கம், ஆன்மீகம் ஆகியவை முக்கியத்துவம் இழந்த இவ்வுலகத்திற்கு மத்தியிலும் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். மக்கள் உள்ளத்திலும், இல்லத்திலும், சமுதாயத்திலும் அமைதி வேண்டி அங்கும் இங்கும் அழைந்து கொண்டிருக்கின்றார்கள். சுருக்கமாக சொல்லப்போனால் உலகம் இறையருளுக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றது. நம்முடைய இவ்வுலக துன்பங்களுக்கு பதிலளிக்கும் கருவியாக ஜெபமாலை விளங்குகின்றது. ஜெபமாலை ஜெபிப்பதன் வழியாக பல ஆன்மாக்கள் கடவுளின் அருகில் வரவும் பாவத்திலிருந்து மீளவும் உதவுகின்றது. ஜெபமாலை இறையாட்சியை நம் மத்தியில் கொண்டு வருகின்றது. ஜெபமாலை நம்மை நம்முடைய விசுவாச வாழ்க்கை பயணத்திலிருந்து விலக விடாமலும், விண்ணுலக பாதைக்கும் அழைத்துச் செல்கின்றது. ஜெபமாலை ஜெபிக்கும் தன் பிள்ளைகளாகிய ஒவ்வொரு குடும்பங்களையும், குழுக்களையும், சமூகத்தையும் இறைவனின் தாயாகிய அன்னை மரியாள் எப்பொழுதும் ஆசீர்வதிக்க இறைஞ்சுவார். உத்தரிக்க ஸ்தலத்தில் இருக்கின்ற ஆன்மாக்களுக்கு விடுதலை பெற்றுத்தரக்கூடிய அற்புதமான கருவியாகவும் ஜெபமாலை திகழ்கின்றது. மரியாளின் மாசற்ற இருதயத்தின் வழியாக ஜெபமாலை ஜெபிப்பதன் மூலம் இவ்வுலகத்தை இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்க உதவுகின்றது. இவ்வாறாக, பக்தியான முறையில் ஜெபமாலை ஜெபிப்பது இன்றைய இன்றியமையாத தேவையாக அமைந்திருக்கின்றது.

"தொடர் ஜெபமாலை ஜெபத்தின் வெள்ளிவிழா" ஆண்டினை கொண்டாடும் இந்த தருணத்தில், " ஜெபமாலை தீய சமுதாயத்திற்கு எதிரான ஓர் பயனள்ள ஆன்மீக ஆயுதம்" எனும் புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களின் கருத்து நினைவுகூற தகுந்தது. மேலும் "குடும்பத்தோடு இணைந்து ஜெபமாலை ஜெபிப்பதன் மூலம் குடும்பத்தில் அமைதியை அனுபவிக்கலாம்" என திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர் குறிப்பிடுகிறார். ஆகவே இந்த சக்திவாய்ந்த ஆன்மீக செயல்பாட்டை புது உற்சாகத்துடன் நாம் சந்திக்கும் அனைவருக்கும் பரப்புவோம். அவர்களுக்கு ஜெபமாலை ஜெபிப்பதன் மூலம் குடும்பத்திற்கு கிடைக்கக்கூடிய ஆன்மீக பலனான அமைதி, ஒற்றுமை, நல்லிணக்கத்தை தெரியப்படுத்துவோம்.

## எவ்வாறு தொடர் ஜெபமாலை ஜெபம் ஜெபிப்பது?

- ஜெபமாலையை நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து ஜெபிக்க பகலிலோ அல்லது இரவிலோ உங்களுக்கு ஏற்புடைய நேரத்தை தேர்வு செய்து கொள்ளவும்.
- ஜெபமாலை ஜெபிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த அக்டோபர் மாதம் முழுவதும் நீங்கள் தேர்வு செய்த நேரத்தில் தொடர்ந்து ஜெபிக்கவும்.
- கொடுக்கப்பட்டுள்ள மன்றாட்டுக்களுக்காக ஒவ்வொரு பத்துமணியையும் அர்ப்பணித்து ஜெபிப்போம்.
- தனியாகவும், குடும்பமாகவும் ஜெபிக்கலாம்.
- அஞ்சல் அல்லது இமெயில் வழியாக ஜெபமாலை ஜெபிக்க நீங்கள் தேர்வு செய்த நேரத்தை இந்த செப்டம்பர் மாத இறுதிக்குள் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- இவ்வாறாக இரவிலும் பகலிலும் பெரிய எண்ணிக்கையில் ஒன்று சேர்ந்து திருச்சபை மற்றும் உலகத்தின் முக்கியமான தேவைகளுக்காக இடைவிடாது ஜெபிப்போம்.

## ரோஸ் மலையில் ஜெபமாலைத் திருவிழா

தொடர் ஜெபமாலை ஜெபத்தை அக்டோபர் 1995ம் ஆண்டு துவங்கிய பொழுது ஜெபமாலை அரசியை பாதுகாவலியாக தேர்ந்து கொண்டோம். அப்பொழுது முதல் ஜெபமாலை அன்னையின் திருவிழாவை அக்டோபர் 7ம் தேதியன்று விசாகப்பட்டிண நகரிலுள்ள ரோஸ் மலையில் ஒரு நாள் முழுவதும் மரியாவின் தியானக் கூட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கின்றோம். இந்த வருடம் "தொடர் ஜெபமாலை ஜெபத்தின் வெள்ளிவிழாவை" முன்னிட்டு அக்டோபர் 5, 6, 7 ஆகிய மூன்று நாட்களும் மரியாவின் தியானக் கூட்டம் நடைபெறும். ஆகவே இந்த தியானக் கூட்டங்களில் தவறாது பங்குபெற்று ஜெபமாலை அன்னையின் பரிந்துரை வழியாக இறைவனின் ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்றோம்.

## தியானக் கூட்டம் நடைபெறும் விவரங்கள்:

அக்டோபர் 5 – சனிக்கிழமை : காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை தெலுங்கிலும்

அக்டோபர் 6– ஞாயிற்றுகிழமை : காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை ஆங்கிலத்திலும்

அக்டோபர் 7 – திங்கட்கிழமை : காலை 10 மணி முதல் மதியம் 4 மணி வரை தெலுங்கிலும் நடைபெறும்.

## மன்றாட்டுக்கள் - 2019




**1-** திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் நற்செய்சி பணிக்காக தங்களையே அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் அனைவரும் மாசற்ற அன்னை மரியாளைப் போன்று ஆண்டவருக்கு தங்களையே முழுவதுமாக ஒப்புவித்து அர்ப்பணித்து வாழ மன்றாடுவோம்.

1




**2-** அனைத்து வகையான மக்களுக்காக ஜெபிப்போம். மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதர மனப்பான்மையுடனும், அன்புடனும், அக்கறையுடனும், பகிர்வுடனும் வாழ மன்றாடுவோம்.

2




**3-** அனைத்து விசுவாசிகளுக்காக ஜெபிப்போம். நாம் அனைவரும் வார்த்தையே உருவான இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சியம் புரிந்து வாழ மன்றாடுவோம்.

3




**4-** அனைத்து பெற்றோர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் அனைவரும் தங்களுடைய குழந்தைகளை ஆசீர்வாதமான வாழ்க்கைக்கு அர்ப்பணிக்கவும் கடவுளின் பிள்ளைகளாக வளர்த்தெடுக்கவும் மன்றாடுவோம்.

4




**5-** கிறிஸ்தவ பெற்றோர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் தங்களின் முன்மாதிரியான சொல்லாலும், செயலாலும் தம் பிள்ளைகள் கடவுளின் இறையாட்சிக்கு உட்பட்டவர்களாக வாழ ஊக்குவிக்க மன்றாடுவோம்.

5




**6** புதிதாக ஞானஸ்தானம் பெற்றவர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் தண்ணீரினாலும், தூய ஆவியினாலும் புதுப்பிறபடைந்துள்ளோம் என்பதை உணர்ந்து, என்றும் கடவுளின் உண்மையான மகனாகவும் மகளாகவும் வாழ ஜெபிப்போம்.

6




**7-**இளைஞர் இளம் பெண்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் உண்மையான, தூய்மையான புனிதமான எண்ணத்துடனும், அன்புடனும் திருமண வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைக்க ஜெபிப்போம்.

7




**8-** திருமுழுக்கு பெற்ற அனைவருக்காகவும் ஜெபிப்போம். திருமுழுக்கு பெற்றவர்கள் கடவுளின் வார்த்தையை அறிவிக்க வேண்டிய தலையாய கடமையை உணர்ந்து சாட்சிய வாழ்வு வாழ மன்றாடுவோம்.

8




**9-** அனைத்து கிறிஸ்தவர்களும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தை முக்கியமாக அகதிகளிலும், புலம் பெயர்ந்தவர்களிலும் கண்டு கருணையும் இறைபணியும் புரிய மன்றாடுவோம்.

9




**10-** ஆண்டவர் இயேசுவின் திருவுடல் திருஇரத்தத்தை உட்கொள்ளும் ஒவ்வொரு -வருக்காகவும் ஜெபிப்போம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தூய்மையான, உண்மையான, முழு பிரசன்னத்தை திவ்விய நற்கருணையில் கண்டு மிகுந்த பற்றுடனும் விசுவாசத்துடனும் நற்கருணை நாதரை உள்ளத்தில் ஏந்த மன்றாடுவோம்.

10

**11-**வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களாலும், பிரச்சனைகளாலும், கவலைகளினாலும் துவண்டுபோய் இருப்பவர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் ஆண்டவர் இயேசுவின் பாடுகளை நினைவுகூர்ந்து அதில் மன அமைதியும், ஆறுதலும், மனவலிமையும் பெற்று துன்பங்களிலிருந்து வெற்றி காண மன்றாடுவோம்.

**12-**ஏழைகள் மற்றும் நலிவடைந்தவர்களுக்காக ஜெபிப்போம். இவர்களுக்கு சமூக நீதியும், மதிப்பும், மரியாதையும், நலனும் கிடைக்க ஜெபிப்போம்.

**13-** இளந்தலைமுறையினருக்காக ஜெபிப்போம். இவர்கள் தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமல் அனைத்து தீமைகளிலிருந்தும் விடுதலை தருபவரான இயேசு கிறிஸ்து காண்பிக்கும் வாழ்க்கை நெறியை கடைபிடித்து வாழ மன்றாடுவோம்.

**14-** வேலையின்மை, தங்க இடமின்மை, கடன் சுமையால் வாடுபவர்களுக்காகவும் முக்கியமாக விவசாயிகளுக்காக ஜெபிப்போம். இவர்களுக்கு அரசானது தங்களுடைய கடைமையைச் செய்து இவர்களின் கண்ணீர் துடைத்து வாழ்க்கையை மலரச் செய்ய மன்றாடுவோம்.

**15-**விசுவாசத்திற்காக துன்பப்படுபவர்களுக்காக மன்றாடுவோம். சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாக இவர்கள் அருளும் ஆசீர்வாதமும் பெற மன்றாடுவோம்.

**16-** இவ்வுலகை விட்டுச் சென்ற ஆன்மாக்களுக்காக ஜெபிப்போம். இவர்களுக்கு மீட்பின் ஆண்டவர் கருணையும் மீட்பும் அருளி வான்வீட்டில் சேர்த்துக்கொள்ள மன்றாடுவோம்.

**17-** வாழ்க்கையின் கடைசி நொடியில் தவிப்பவர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் ஆண்டவருடைய முழு அன்பையும் பாவ மன்னிப்பையும் அனுபவித்து அமைதியான உள்ளத்துடன் இறைவனடி சேர மன்றாடுவோம்.

**18-** உண்மையை அறிய தேடல் புரிபவர்களுக்காக ஜெபிப்போம். இவர்களுக்கு இறைவன் தூய ஆவியாரின் கனிகளையும் கொடைகளையும் தந்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

**19-** நிலையற்ற செல்வத்தை நிர்வாகம் செய்பவர்களுக்காக ஜெபிப்போம். அன்னை மரியாளின் பரிந்துரையினால் இவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையற்ற செல்வங்களை நேர்மையாகவும் பொறுப்புடனும் பயன்படுத்தவும். நிர்வாகம் செய்யவும் ஆற்றல் தர மன்றாடுவோம்.

**20-** தொடர் ஜெபமாலை ஜெபத்தில் பங்குகொள்ப - வர்களுக்காக ஜெபிப்போம். இவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் வாழ்க்கையின் அர்த்தத்தை அறியவும் இறுதியில் அன்னை மரியாளின் மாட்சியில் பங்கு பெறவும் ஜெபிப்போம்.

## ROSARY DEVOTIONS AT ROSS HILL


**Every 1st Saturday :**

*Fasting Prayer, Mass and Procession with Statue of Our Lady of Fatima (10.00 a.m. to 6.00 p.m.)*

**Every 2nd Saturday & Last Sunday**

*Complete Rosary Mysteries with 1000 Hail Marys. (10.00 a.m. to 3.00 p.m.)*

The Director
Mary Matha Shrine Ross Hill,
Visakhapatnam-01 , A.P., India
chainrosaryprayer@gmail.com,
PH : 0891 -2562318, Cell : 9573709412
www.rosarychainprayer.com
www.rosshillshrine.org




# தொடர் ஜெபமாலை ஜெபம்

2019

